සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Department of Education - Western Province**

දෙවන වාර ඇගයීම - 2018
இரண்டாந் தவணை மதிப்பீடு - 2018
**Second Term Evaluation - 2018**

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade 11 | විෂයය / பாடம் / Subject தமிழ் மொழியும் இலக்கியமும் - I | පත්‍රය / வினாத்தாள் / Paper I,II | පැය / மணித்தியாலம் / Hours 01 |

නම
பெயர்
Name

**கவனிக்க:**

**(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் I இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.**

**(ii) 1 – 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

**(iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.**

---

- **தடித்த எழுத்தில் அமைந்த சொல்பற்றிய வினாவிற்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1) 'முத்துதிர**நகை**செய்யும் சொத்தாகும் மழலை' - இதில் நகை என்பதன் பொருள்.

(1) அணி (2) ஆபரணம் (3) சிரிப்பு (4) சொத்து

2) ''எனது சிரசில் **சௌந்தர்ய** கிரீடம் சூட்டியதான மிதப்பு' – சௌந்தர்யம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்

(1) அழகு (2) பெருமை (3) முடி (4) கர்வம்

3) **'பேதமை** என்பது ஒன்று யாதெனில்…….' இதில் பேதமை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்.

(1) அறியாமை (2) திருப்தி (3) அறிவுடைமை (4) போதம்

4) 'வாய்ப்பேச்சால் சினிமா **நலிவு** அடைகின்றது.' நலிவு என்பதன் எதிர்க்கருத்துச் சொல்.

(1) மெலிவு (2) தளர்வு (3) பொலிவு (4) சரிவு

5) 'அன்னப்**பெடை** சிறையிலது ஆய்க்கரை துன்னிற்று.'பெடை என்பதன் எதிர்ப்பாற் சொல்.

(1) சேவல் (2) பெட்டை (3) குண்டு (4) பிணை

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6) சினிமா மொழியின் மூன்றாவது முக்கிய அம்சம் எடிட்டிங் (Editing) ஆகும். எடிட்டிங் என்பதன் தமிழ்ச் சொல்.

(1) ஒளிப்பதிவு (2) படத்தொகுப்பு (3) ஒலிப்பதிவு (4) படிமம்

7) பின்வருவனவற்றுள் கிழக்குப்பிரதேச வழக்குச் சொல்லாக **அமையாதது.**

(1) மோனை (2) மனே (3) களவெட்டி (4) பத்தை

8) 'மிக நெருக்கமான நட்பு' என்ற பொருளைத் தருவது.

(1) இங்கிதம் (2) அன்புடைமை (3) கெழுதகைமை (4) கூட்டுறவு

9) தன்னலத்திற்காகப் பிறர் சொத்தை அல்லது உழைப்பை பயன்படுத்துதல் என்பதை உணர்த்தும் சொல்

(1) சர்வாதிகாரம் (2) சுரண்டல் (3) ஏகபோகம் (4) தனியுரிமை

10) பலாவின் இளங்காய்

(1) பிஞ்சு (2) மூசு (3) குரும்பை (4) கச்சல்

11) முரசறைந்து அரசனுடைய கட்டளையை மக்களுக்கு அறிவிப்பவன்

(1) ஒற்றன் (2) கலைஞன் (3) வள்ளுவன் (4) சேவகன்

12) காலதர் , சாளரம், பலகணி – எனும் சொற்களுக்குப் பதிலாக தற்காலத் தமிழில் வழங்கும் போர்த்துக்கேய மொழிச் சொல்

(1) யன்னல் (2) பல்கனி, (3) கதவு (4) குசினி

13) கலை, களை, கழை என்பன முறையே

(1) ஆண்மான்,புல், கரும்பு (3) கரும்பு, ஆண்மான், புல்

(2) புல், ஆண்மான், கரும்பு (4) புல், கரும்பு, ஆண்மான்

14) ஆண்களுக்கே உரித்தான நாற்குணங்களாக அமைவது

(1) அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு (3) அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி

(2) வீரம், புகழ், கண்ணியம், கற்பு (4) வெட்கம், வீரம், அறிவு, வெற்றி

15) 'உணர்வொழிகாலம்' என்ற தொடரால் உணர்த்தப்படுவது

(1) பள்ளிப்பருவம் (2) இளமைப்பருவம் (3) முதுமைப்பருவம் (4)துள்ளித்திரியும்காலம்

16) ஒருவருக்கு கிடைக்கும் வருவாய் முதலியவற்றை இல்லாது செய்வதைக் குறிக்கும் மரபுத் தொடர்

(1) வயிறெரிதல் (2) வயிற்றிலடித்தல் (3) வயிறுகுளிர்தல் (4) வயிறாறுதல்

17) தலைமேற் கொள்ளல் என்னும் மரபுத் தொடரின் பொருள்

(1) தலையில் வைத்தல் (3) பயபக்தியுடன் ஏற்றுக் கொள்ளல்

(2) தலையிற் சுமத்தல் (4) தலையிற் தாங்குதல்

18) எந்தத் துன்பம் வந்தாலும் பெரியோர் தம் நிலையில் இருந்து மாறுபடார் எனும் கருத்தைத் தரும் பழமொழி

(1) ஆறிலும்சாவு நூறிலும்சாவு (3) இரக்கப் போனாலும் சிறக்கப்போ

(2) தேய்ந்தாலும் சந்தனக்கட்டை மணம்மாறாது (4) ஆனைக்கும் அடிசறுக்கும்.

19) எதிர்ப்பொருள் குறித்த இரு சொற்கள் இணைந்து அமையாத இணைமொழி

(1) ஆதி அந்தம் (2) உள்ளும் புறமும் (3) ஏச்சுப்பேச்சு (4) ஏற்றஇறக்கம்

20) பின்வரும் உவமைத் தொடர்களுள் பொருளால் வேறுபடுவது

(1) வெய்யிலில் பட்ட புழுப்போல (3) கார்த்திகைப் பிறை கண்டதுபோல

(2) தூண்டில் புழுவைப்போல (4) வெந்தழலில் விழுந்த தளிர்போல

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

21) அரைமாத்திரை அளவினைக் கொண்டு ஒலிப்பது

(1) ஆயுதக்குறுக்கம் (2) ஆய்தம் (3) உயிர்மெய்குறில் (4) மகரக்குறுக்கம்

22) மொழி இறுதியில் வரும் எழுத்துக்களை மட்டும் கொண்ட தொகுதி

(1) ந், ப், ங் (2) ண், ன், ம் (3) ர், ள், ப் (4) ந், ப், ட்

23) 'குறுகுறு நடந்து சிறுகை நீட்டி' இங்கு குறுகுறு என்பது

(1) இணைமொழி (2) இரட்டைக்கிளவி (3) அடுக்குத்தொடர் (4)ஒலிக்குறிப்புச் சொல்

24) வேற்றுமைத் தொகையாக வந்துள்ள தொடர்

(1) முச்சுடர் (2) பூவிதழ் (3) இன்சுவை (4) விரிசுடர்

25) எதிர்மறை இடைநிலைகளைக் கொண்டுள்ள தொகுதி

(1) இல், ஆ, ஆத் (3) இல்,கின்று, ஆத்

(2) அல், தல், ஆ (4) தல், அல், ஆத்

26) பின்வருவனவற்றுள் ஆக்கப் பெயரடையாக அமைவது

(1) வேகமாய் (2) வேகமாக (3) இனிமையாய் (4) இனிமையான

27) 'இறைவனை வழிபடாத வாணாள் முழுவதும் வீணே' இங்கு வாணாள் என்பது

(1) இலக்கணப்போலி (3) இடக்கரடக்கல்

(2) மரூஉ (4) குழூக்குறி

28) வேற்றுமை உருபை ஏற்காத சொல்

(1) இனி (2) யாம் (3) கனி (4) படித்தவன்

**பொருத்தமற்ற உதாரணம் இடம்பெறும் சொற்றொகுதியைத் தெரிவு செய்க.**

29)

(1) ஏவல் பன்மை :- எழுமின், வாருங்கள்

(2) வியங்கோள் வினை :- வாழ்க, பொழியட்டும்

(3) எதிர்மறை வினை :- நடந்திலன், எழுதாது

(4) செயப்பாட்டு வினை :- பாடப்படும், பாராட்டினான்

30) (1) குற்றியலுகரம், :- நாக்கு, மாசு

(2) பின்னொட்டு :- கனவான், தலைமை

(3) ஆயுதக்குறுக்கம் :- எ.்.கு, ப.்.றுளி

(4) இலக்கணப் போலி :-இல்முன், நாநுனி

- **புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31) புதிய, இளைஞர் கலாமன்றம் ஒன்று அண்மையில்........................... செய்துவைக்கப்பட்டது.

(1) சமர்ப்பணம் (2) அங்குரார்ப்பணம் (3) அர்ப்பணம் (4) அரங்கேற்றம்

32) தமிழ் வளர்த்த முச்சங்கங்கள் அழிவதற்கு ...................... காரணமாயிற்று

(1) ஊர்கோள் (2) கால்கோள் (3) கடல்கோள் (4) ஏறுகோள்

33) எண்பதாவது ஆண்டுப்பூர்த்தியை முன்னிட்டு ............................. கொண்டாடப்படும்.

(1) காகிதவிழா (2) முத்துவிழா (3) அமுதவிழா (4) மாணிக்கவிழா

34) போட்டிக்குச் செல்லும் மாணவர்களுக்கான ...................... பொறுப்பாசிரியரால் வழங்கப்பட்டன.

(1) அறிவித்தல்கள் (2) அறிவுறுத்தல்கள் (3) செய்திகள் (4) படங்கள்.

35) விபத்தினால் ஏற்படக்கூடிய இழப்பினை ஈடுசெய்வதற்கு முன்கூட்டியே செய்யப்படுவது............

(1) சேமிப்பு (2) காப்புறுதி (3) முதலீடு (4) மானியம்

36) கடல்வள எல்லை தொடர்பாக இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே………… கைச்சாத்திடப்பட்டது.

(1) உறுதி (2) உடன்படிக்கை (3) உத்தரவு (4) சட்டம்

- **தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.**

பன்றியைப் போலிங்கு மண்ணிடைச் சேற்றில்
படுத்துப் புரளாதே
வென்றியை நாடியிவ் வானத்தில் ஓட
விரும்பி விரைந்திடுமே
முன்றலில் ஓடுமோர் வண்டியைப் போலன்றி
மூன்றுலகும் சூழ்ந்தே
நன்று திரியும் விமானத்தைப் போலொரு
நல்ல மனம் படைத்தோம்.

37) கவிஞர் எதனுடைய மேன்யைப் போற்றுகின்றார்

(1) பன்றி (2) வானம் (3) மனம் (4) விமானம்

38) அதன் உயர்வுக்குத் தடையாக அமைவது

(1) வெற்றியை நாடி வானத்தில் ஓடுதல்

(2) நன்று திரியும் விமானம் போலாகுதல்

(3) உயர்வை நாடி விரும்பி விரைந்திடுதல்

(4) பன்றியைப் போல் மண்ணிடைச் சேற்றில் படுத்துப் புரழுதல்

39) இப்பாடலில் இடம்பெற்றுள்ள சொல் அணி ஒன்று

(1) எதுகை (2) மோனை (3) சிலேடை (4) மடக்கு

- **கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும்.அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.**

40) (அ) – வேகமாக வளர்ந்துவரும் விஞ்ஞானம் உலகை ஒரு குடும்பமாக அமைத்துவிட்டது.

(ஆ) – எனவே மொழிகளின் சொற்கோவையும் பெருகி வளர்ந்து கொண்டே செல்கின்றது.

(இ) – அதனால் ஒருவருடன் ஒருவர் நெருங்கிப்பழகும் வாய்ப்பும் அதிகரித்துள்ளது.

(ஈ) – அங்ஙனம் சுரந்த கருத்துக்களை உணர்த்த புதிய புதிய சொற்கள் பல தேவைப்படுகின்றன.

(உ) – அவ்வாய்ப்பு புதிய புதிய கருத்துக்கள் சுரக்க வழிசெய்யலாயிற்று

(1) ஆ, இ,ஈ, உ, அ (3) இ, ஆ, அ, உ,ஈ

(2) அ, .இ, உ,ஈ, ஆ (4) உ,ஈ, அ, ஆ, இ

සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

දෙවන වාර ඇගයීම - 2018
இரண்டாந் தவணை மதிப்பீடு - 2018
Second Term Evaluation - 2018

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 11 | විෂයය / பாடம் / Subject: தமிழ் மொழியும் இலக்கியமும் - II | පත්‍රය / வினாத்தாள் / Paper: I,II | පැය / மணித்தியாலம் / Hours: 02 |

නම
பெயர்
Name

1. **சுருக்கமான விடை எழுதுக.**

I. பின்வரும் தொடரைச் சந்திபிரித்து எழுதுக.
'வான நெடுங் கடலிடை வெள்ளி ஓடமெனத்திகழ் வெண்ணிலா'

II. பின்வரும் பேச்சு வழக்குத்தொடரை எழுத்து வழக்குத்தொடராக மாற்றி எழுதுக.
'உன்ரை கொண்ணன்தான் சொல்லுறான்'

III. 'உடு என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்கதாகத் தனித்தனி வாக்கியங்களில் எழுதுக.

IV. பின்வரும் வாக்கியத்தைப் பொருத்தமான நிறுத்தக் குறியீடு கொண்டு அமைக்குக.
அர்ச்சனா இந்தப் பரீட்சையை நடத்துபவர்கள் யார் எனக் கேட்டாள்.

V. 'கையூட்டு' என்ற சொல்லின் கருத்துப் புலப்படுமாறு அச்சொல்லை வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

VI. 'கண்ணன் தின்னப்பழம் கொண்டு தருவான்' இதனைச் செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

VII. பின்வரும் வாக்கியத்தின் எழுவாய் பயனிலைகளைக் குறிப்பிடுக.
ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்து அவனைக் கல்வியறிவு உடையவனாக்குதல் கோடான கோடி புண்ணியமாகும்

VIII. 'கற்பகத்தருவெனக் கவின் பெற விளங்கிய மரக்கொம்புகளை நயந்து நோக்கினான்' இதில் இடம் பெற்றுள்ள அணியை இனங்காண்க.

IX. அந்த வீட்டில் எழுத்தாளர் ஒருவர் இருந்தார். எழுத்தாளர் ஒரு கதைக்களஞ்சியம் மேற்படி தனிவாக்கியங்களைக் கூட்டுவாக்கியமாக்குக

X. பின்வரும் வாக்கியத்தை மயக்கம் நீக்கி எழுதுக.
பிரபல்யமான இந்தியாவின் நடிகை மாரடைப்பால் இறந்தாள்.

2. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

I. எமது நாட்டை ஆச்சரியமிக்க ஒரு நாடாக மாற்றுவதற்காகப் பல அபிவிருத்தித் திட்டங்களை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. இன்னும் பத்து வருடங்களின் பின்னர் எமது நாடு கைத்தொழில், விவசாயம், போக்குவரத்து, தொடர்பாடல், மருத்துவம், கல்வி, வாழ்க்கைத்தரம் என்பவற்றில் மேம்பாடு அடையும் என்பது பற்றி விளக்கும் வகையில் ஒரு **விளக்கக் கட்டுரை**.

II. உடல் நலத்துக்குக் கேடு விளைவிக்கும் உணவு, பானங்கள் என்பவற்றை உட்கொள்வதால் பலரும் நோய்வாய்ப்படுவதை இன்று அடிக்கடி நாம் கண்டும் கேட்டும் வருகின்றோம். இவ்வாறு நோயை ஏற்படுத்தக்கூடியவற்றை அறிந்து விழிப்புணர்வுடன் நடந்து கொள்ளுதல் அனைவரதும் பொறுப்பும் கடமையுமாகும்.

நோயை ஏற்படுத்தக்கூடிய உணவுவகைகள், பானங்கள், அவற்றால் விளையக்கூடிய தீங்குகள், அவற்றைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்பன பற்றி இருவருக்கிடையே இடம்பெறும் **உரையாடல்**.

III. இயற்கை வளங்களுள் காடுகள் பிரதானமானவை. காடுகளை மனம் போனவாறு அழிக்கின்றார்கள். மரங்கள் வெட்டப்படுகின்றன. இதனால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றியும் அவை பேணப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் ஒரு **மேடைப்பேச்சு**.

IV. சிறுவயதிலேயே தாயை இழந்து விட்ட மாதவி தந்தையின் அரவணைப்பில் வளர்ந்து வந்தாள். தாயின் அன்பை அறியாத மாதவி பிடிவாதமும் முரட்டுக்குணமும் கொண்டிருந்தாள். கல்வியில் அக்கறை காட்டுமாறு தந்தை கூறிய அறிவுரையையும் புறக்கணித்து நடந்தாள். திடிரெனத் தந்தை நோய்வாய்ப்பட்டார் அவள் வாழ்க்கையில் பல சோதனைகள் ஏற்பட்டன. இறுதியில் ‘தந்தை சொல் மிக்க மந்திரமில்லை’ என்பதன் பொருளை படிப்படியாக உணர்ந்து வாழத் தொடங்கினாள்…. இதனை விளக்கும் விதத்திலான ஒரு **சிறுகதை.**

3. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக.

நாவையும் அடக்கி சிந்தனையையும் ஒருமுகப்படுத்தி வாக்கும் மனமும் செயலின்றி இருத்தல் மௌனம் ஆகும். இது மிக உயர்ந்தநிலை. ஞானம் கைவரப் பெற்றவர்களுக்குத்தான் இது சாத்தியமாகும். எம்மில் ஞானம் கைவரப்பெற்றவர் எத்தனைபேர் என்பதை நாம் அறியோம். ஆயினும் ஞானம் கைவரப் பெறாதவர்கள் மிகப்பலர் என்பது மட்டும் உண்மை. மௌனத்தை வாழ்வில் மேற்கொள்வதற்கு, ஞர்னம் வரும் வரை காத்திருக்க வேண்டியதில்லை அப்படியாயின், மௌனத்தினால் கிடைக்கும் பலாபலன்களை என்றுமே அனுபவிக்க முடியாதவர்களாகி விடுவோம். எனவே, எங்களால் இயன்றளவு உரிய வேளைகளில் ஏற்ற சந்தர்ப்பங்களில், மௌனத்தைக் கடைப்பிடிப்பதால், பல தொல்லைகள், வீண்சோலி தொந்தரவுகள் ஆகியவற்றிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ள முடிகிறது. வாய் மட்டும் பேசாதிருந்தால் நாம் ஊமையாகிவிடுவோம் என்று அஞ்சத் தேவையில்லை. வாயினால் இனியவற்றை, இன்பமானவற்றை, பிறருக்கு துன்பம் பயக்காதவற்றைப் பேசக்கூடாது என்று தடைபோடப்படவில்லை. ஆனால் கடுஞ்சொற்கள், வன்சொற்கள், வீண்வார்த்தைகள், பொய்யுரைகள், சூழுரைகள், புறங்கூறல், அமங்கல வார்த்தைகள் ஆகியவற்றை வாயினால் உரைக்காது, அதனால் பிறருக்கு ஆத்திரமூட்டாது, அச்சந்தர்ப்பங்களில் மௌனம் சாதிப்பதால் எத்தனையோ கொடிய விளைவுகளைத் தவிர்த்த பெருமைக்கு ஆளாகின்றோம். அப்படிமௌனம் மேற்கொள்ளப்படுவதால், பேசத்தெரியாதவர்களென்றோ, பலம் அற்றவர்களென்றோ, தோல்வியைத் தழுவியவர்களென்றோ எண்ணுவது அறிவீனமாகும். உண்மையில் பலம் உள்ளவர்களே மௌனத்தைக் கடைப்பிடிக்க முடியும். மௌனத்திலேதான் பலம் அதிகம். மௌனம் தோல்வியின் அறிகுறியல்ல. அது வெற்றியின் சிகரம்.

4. பின்வரும் உரைநடைப்பகுதியை வாசித்து அதன்கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

'அறிவு அற்றம் காக்கும் கருவி' என்பது வள்ளுவர் வாய்மொழி அது உண்மை எப்போது என்றால், அந்த அறிவு, தூய்மையின் அடிப்படையில் வளர்ந்து வரும் போது ஆகும். அத்தகைய தூய்மையும் வாய்மையும் விரவிய அறிவு மனிதனின் மனத்தை அது சென்ற இடங்களெல்லாம் செலவிடாது; சூது, சூழ்ச்சி, சதி போன்ற தீய செயல்களிலிருந்து. விலக்கி, நன்மை தருகின்ற நற்கருமங்களிலே மாத்திரம் செல்லவிடுகின்றது. மெய்ப்பொருள் காண்பதற்கும், நுண்பொருள் காண்பதற்கும் அறிவு உதவ வேண்டுமே தவிர, பொய்யிற்கும் புரளிக்கும் சூதுக்கும் வாதுக்கும் அறிவு ஒரு போதும் துணை போகக்கூடாது.

ஆனால் உலகில் நடப்பது நடந்து கொண்டிருப்பது என்ன? இக்காலத்தில் அறிவு விவேகத்தையும் பல்வேறு திறன்களையும் வளர்க்கின்ற அதேவேளை மனிதனின் நல்ல மனிதப் பண்புகளை விருத்தியாக்கத் தவறிவிட்டது. மனிதனுக்கு மனிதத்தன்மையை அளியாத அறிவு பயனற்றது. மனித சமுதாயத்தின் அமைதிக்கும் சாந்திக்கும் மகிழ்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் வழிவகுக்காத அறிவினால் ஆகுவது யாதொன்றுமில்லை. மனிதனுக்கு சூதும்வாதும் பெற்றுத் தரும் அறிவு அழிவுக்கே இட்டுச் செல்கின்றது.

1. அறிவு பற்றி வள்ளுவரின் கருத்து யாது?
2. வள்ளுவர் கூறும் அறிவின் சிறப்புக்கள் யாவை?
3. தற்காலத்தில் 'அறிவு' எவ்வாறு செயற்படுகின்றது என ஆசிரியர் கூறுகின்றார்?
4. அறிவு ஏன் பயனற்றுப் போகிறது?
5. அறிவு எப்போது அழிவை நோக்கிச் செல்கின்றது?

5. வீதியோரங்களில் குப்பை கூளங்களைப் போடுவதனால் ஏற்படும் சுகாதாரச் சீர்கேட்டினை விளக்கி, மாநகரசபை ஆணையாளருக்கு 100 சொற்களில் **கடிதம்** எழுதுக.

அல்லது

இலங்கை விவசாய நாடாக இருந்த போதிலும் இன்றைய இளைஞர்கள் விவசாயத் துறையை வெறுப்பதால், விவசாய உற்பத்திகள் வீழ்ச்சியடைகின்றன. அந்த நிலைமையைத் தடுத்து, எதிர்காலத்தில் எமது நாட்டு இளைஞர்கள் விவசாயத்துறையில் ஆர்வத்துடன் ஈடுபட வேண்டியதன் அவசியத்தை விளக்கி 100 சொற்களில் ஓர் **துண்டுப்பிரசுரம்** எழுதுக.

සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

දෙවන වාර ඇගයීම - 2018
இரண்டாந் தவணை மதிப்பீடு - 2018
Second Term Evaluation - 2018

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 11 | විෂයය / பாடம் / Subject: தமிழ் மொழியும் இலக்கியமும் - III | පත්‍රය / வினாத்தாள் / Paper: I,II | පැය / மணித்தியாலம் / Hours: 02 |

නම
பெயர்
Name

**கவனிக்க**

- **அறிவுறுத்தலுக்கமைய ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**
- **1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.**
- **இவ்வினாத்தாளிற்குரிய புள்ளிகள் 80 ஆகும்.**

---

1. சுருக்கமான விடை தருக.

(i) 'வுள்ளல் சீதக்காதியின் கொடைச்சிறப்பை சதகம் வடிவில் சிறப்பித்துப் பாடியுள்ளார் புலவர்'

அ) சதகம் என்பது யாது?

(ஆ) தொண்டை மண்டலச் சதகம் யாரால் பாடப்பட்டது?

(ii) 'முழங்கு திரைப் புனலருவி கழங்கென முத்தாடும்
முற்றமெங்கும் பரந்து பெண்கள் சிற்றிலைக் கொண்டோடும்'

அ) இவ்வடிகளில் இடம்பெறும் பெண்களால் விளையாடப்படும் விளையாட்டுக்கள் இரண்டைக் குறிப்பிடுக.

ஆ) புனலருவி என்பதில் காணப்படும் அணி யாது?

(iii) 'சேர்.பொன். இராமநாதன்துரை அரை நூற்றாண்டுக்கு மேல் இலங்கைச் சட்ட சபையில் ஓரிலங்கைச் சிவப்பாயிருந்து விளங்கினார்.'

(அ) இக்கூற்று இடம்பெறும் கட்டுரை எது?

(ஆ) ஓரிலங்கைச் சிவப்பாயிருந்து விளங்கினார் - இத்தொடரின் உட்கருத்தினை எடுத்துக் கூறுக.

(iv) "எனது நண்பர் கம்பியூட்டருக்கு தலபுராணம் பாடியவர்"

(அ) தலபுராணம் என்றால் என்ன?

(ஆ) இங்கு அத்தொடர் உணர்த்தும் பொருள் யாது?

(v) "கொடுமையால் அளந்தாளை யாரிவரென்று கூறு"

(அ) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?

(ஆ) கொடுமையால் அளந்தவள் - எனக் குறிப்பிடப்படுவர் யார்?

(vi) 'வெங்கட் பிறைக்கும் கரும்பிறைக்கும்
மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே'

அ) இத்தொடரில் பெண்ணின் இரங்கத்தக்க நிலை எவ்வாறு வெளிப்படுகின்றது?

ஆ) மூன்று பிறைகளையும் விளக்குக.

(vii) ‘எம்கண்காணா கலியுக அரிச்சந்திரனான……………….’

(அ) கலியுக அரிச்சந்திரன் யார்?

(ஆ) அவர் உலகிற்கு வழங்கிய இலட்சியம் யாது?

(viii) ‘அந்தநதி வரும் நாளில்
சீறி ஒலியெழுப்பி ஓடாது
உறையும் சிறுதுளியாய்’

அ) இவ்வடிகளால் கவிஞர் உணர்த்த முற்பட்ட விடயம் யாது?

ஆ) இக் கவிதையை எழுதியவர் யார்?

(ix)‘ தனித்து நின்றும் சத்தியத்தால் தலைநிமிரும் மனிதன்
தற்பெருமை கொள்ளாது தலைதாழும் அறிஞர்’

அ) இவ்வடிகளில் இழையோடும் விழுமியப்பண்புகள் இரண்டு கூறுக?

ஆ) இவ்வடி இடம்பெறும் கவிதை எது?

(x) ‘ஏலம்பூ வாய் பொசுங்க
எரியிறது தீக்கொழுந்து
காலப் புனல் கனக்கும்
கண்ணீரையும் சுமந்து’

(அ) இவ்வடிகளால் உணர்த்தப்படும் காட்சி என்ன?

(ஆ) இத்தொடரில் இடம்பெறும் அணியை எடுத்துக்காட்டுக? (20 புள்ளிகள்)

**2.** பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

(i) உப்பிலாக் கஞ்சியினை யுண்ணு மறுசுவைபோல்
தப்பிய கந்தைபீ தாம்பரம்போல் - ஒப்பும்
பனையோலைப் பாயிற் படுத்துறங்கும் வாழ்வார்
மனங்கொண்டது மாளிகை.

அ) இப்பாடலில் இடம்பெறும் முதுமொழி யாது?

ஆ) அம்முதுமொழியின் கருத்து எவ்வாறு வலியுறுத்தப்படுகின்றது?

(ii) சுழித்து நீர்வரு துறையாற்றை, சூழ்படை
கழித்து நீக்கியதென, கள்ள வாசையை
யழித்து, வேறுஅவனி பண்டாண்டவேந்தரை
யிழித்து, மேலேறி னான்றானு மேறினான்.

அ) இப்பாடலில் கங்கை ஆற்றின் சிறப்பு எவ்வாறு சித்திரிக்கப்படுகின்றது?

ஆ) பரதன் எவ்வாறு சிறப்பிக்கப்படுகின்றான்.?

(iii) பதியிழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த
நிதியிழந்தனம் இனிநமக் குளதென நினைக்குங்
கதியிழக்கினுங் கட்டுரை யிழக்கிலோ மென்றான்
மதியிழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்

அ) இப்பாடல் இடம்பெறும் இலக்கியம் எது?

ஆ) ‘மதியிழந்து தன்வாயிழந் தருந்தவன் மறைந்தான்’ - இத்தொடரால் உணர்த்தப்படுபவர் யார்?

(iv) சமயங்களில் “அரவிந்தா! அரவிந்தா! இஞ்ச வா” என்று யானை ஆதிமூலத்தைக் கூப்பிடுவது போல ஓலமிடுவாள் என் மனைவி. “கம்பியூட்டர் இந்தக் கூட்டலை தப்பு தப்பாய் போட்டிருக்கு. இதை ஒருக்கா பார்” என்பாள். என்னுடையமகனும் என்னம்மா நீங்கள் சும்மா சும்மா கூப்பிட்டு ட்ரபிள் கொடுக்கிறீங்கள்” என்று நடப்பு விட்டுக்கொண்டே போய் அந்தச் சில்லறைத் தகராறை சரிசெய்துவிட்டு வருவான் இப்படியாக அந்தக் கணிப்பொறியின்

வருகைக்குப் பிறகு எங்கள் வீடு ஒரு விஞ்ஞானத் துள்ளல் துள்ளி வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தது.

அ) சில்லறைத் தகராறு என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

ஆ) "எங்கள் வீடு ஒரு விஞ்ஞானத் துள்ளல் துள்ளி வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தது" என்னும் அடியின் பொருளை விளக்குக?

(v) தயிர்ச்சட்டியின் வடிவத்தில் வானில் கிடந்தது நிலா. கொட்டிவைத்த இடத்தில் சற்றுநேரம் இசகாமல் பிசகாமல் உறைந்திருக்கும் எருமைத் தயிரைப்போல் ஆடாமல் இருந்தது அதன் வடிவம். வெண்ணிற மேகங்கள் நிலாவை மூடி மூடி ஆலிங்கனம் செய்கையில் உறைதயிரின் பாலாடையோ எனவியக்கவைத்தது அதன் அழகு.

அ) நிலவின் வடிவம் எதற்கு உவமிக்கப்பட்டுள்ளது?

ஆ) 'உறைதயிரின் பாலாடையோ' என வியக்கவைத்த காட்சி எது?

(20 புள்ளிகள்)

3. கம்பராமாயணம் குகப்படலத்தில்

அ) குகனின் குணப்பண்புகள்

ஆ) கோசலை பற்றிய விபரிப்பு

இ) கைகேயின் கொடுந்தன்மை என்பன சித்தரிக்கப்படும் வகையினைக் கூறுக.

**அல்லது**

மூத்தம்மா என்னும் சிறுகதையில்

அ) மூத்தம்மா என்ற கதாபாத்திரத்தின் சித்திரிப்பு

ஆ) கிராமிய வாழ்வியல் அம்சங்கள் - ஆகியன விபரிக்கப்படுமாற்றினை விளக்குக.

(15 புள்ளிகள்)

4. சி.வி. வேலுப்பிள்ளையின் தேயிலைத் தோட்டத்திலே என்ற கவிதையில்

அ) தொழிலாளர்களின் கடின உழைப்பு

ஆ) தொழிலாளர்களின் மகத்துவம் போற்றப்படாமை குறித்து புலப்படும் கவிஞரின் ஆதங்கம் ஆகியன வெளிப்படும் வகையினைத் தெளிவுபடுத்துக.

**அல்லது**

எது நல்ல சினிமா என்ற கட்டுரையில்

அ) நல்லதொரு சினிமாவில் உள்ளடங்க வேண்டியவை யாவை?

ஆ) கட்டுரையாசிரியரின் மொழிநடை சிறப்பினை விபரிக்குக?

(15 புள்ளிகள்)

- **5, 6, 7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒன்றினைத் தெரிவு செய்து விடை எழுதுக.**

5. பாரதியார் சுயசரிதையில்

(அ) பாரதியாரின் காதல்வயப்பட்ட மனநிலையினை எடுத்துக் கூறுக.

(ஆ) அது எவ்வாறு விளக்கப்படுத்தப்பட்டுள்ளது?

(10 புள்ளிகள்)

6. 'திருக்குறள் பேதமை' என்னும் அதிகாரத்தில் பேதையரின் இயல்பும், இழிவும் எடுத்துக் கூறப்பட்டிருக்கும் வகையினை தெளிவுபடுத்துக.

(10 புள்ளிகள்)

7. காளமேகப் புலவரின் ஆடிக்குடத்தடையும் என்னும் பாடலில் பாம்புக்கும் எள்ளுக்கும் கூறப்பட்டுள்ள சிலேடை பொருட்சிறப்பினை எடுத்துக்கூறுக.

(10 புள்ளிகள்)